முருகப்பெருமான் துணை

**மகான் பிரும்மமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.12.2022, செவ்வாய்கிழமை

1. அன்னதான மகா பிரபுவே அரங்கா
அவதார ஞானச் சுடரே தேசிகா
மன்னவனாய் மக்களுக்கு ஞானம் அருளி
மகா பலம் தரும் கலியுகத்தின் ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் அனுகூல ஆசிதனை
இனிமைபட சுபகிருது சிலையின் திங்கள்
இயம்பிடுவேன் வியதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 12 ம் நாள் 27.12.2022, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் பிரும்மமுனிவர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரதமெங்கும் அரங்கன் புகழ்மாலை
பசிப்பிணி விரட்டும் வண்ணம்
4. வண்ணமுடன் அரங்கன் காட்டுகின்ற
வள்ளல்நெறி சக்தியாய் நின்றிட
எண்ணம் முழுக்க ஞானம் மக்களிடை
இலகுவாய் பரவி முழுமை கண்டு
5. கண்டுமே அரங்கன் தேடுகின்ற வண்ணம்
கலியுகத்தில் ஞானவான்கள் மிகுந்து
தொண்டர்கள் மயமாக உலகமெல்லாம் பெருகி
தெய்வ பலம் மக்களுக்கு வந்தடையும்
6. அடையவே அரங்க ஞானி உபதேசமே
அகிலத்தை மாற்றும் வேதமாக
தடையற மக்களுக்குள் நிறைந்தால்
தவபலமாய் மக்களுக்கு சக்தி கூடி
7. கூடியே இந்த உலகம் ஞானவான்
கூட்டம் நிறைந்த சபைகளாக மாறி
நாடிடும் ஞானவான்கள் தலைமையாக
நல்கியே ஞான ஆட்சி மலரும்
8. மலர வைப்பேன் என உலகினில்
மாதவம் புரிந்து வரும் அரங்கனே
வளருகின்ற கலித்துன்பங்களை போக்கி
வையகத்தை காத்திடும் சக்தியாகும்
9. ஆகவே அரங்கமகானை விட்டால்
அகிலத்தில் வேறு பலம் இல்லையப்பா
மிகைபட அன்னதனால் உலக மக்கள்
மேலான பிரணவ குடிலை நாடி

10. நாடியே அன்னதானத்தில் பொருளுதவி
நன்மை காணும்படி வழங்கியே
தேடியே சகல இடங்களிலும் பசிப்பிணி
தெய்வ அம்சமாக விரட்டி நின்று

11. விரட்டியே சேவைதனை தொடர்ந்து உலகோர்
வினவிடுவேன் தொடர்ந்து செய்து வருதலுற
தரணியெங்கும் அரங்கனின் தவசக்தி
தலைமை ஏற்று உலகையே மாற்றும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–